the dignity and safeguard the integrity of our country and wishes to assure them that in their heroic efforts they have the good wishes of the entire country behind them '.

The resolution was put and carried unanimously.

IV.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Law Commission for Madras State

* 479. *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether a Law Commission for Madras State was proposed; and

(*b*) if so, the present state of that proposal?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The proposal was considered and dropped.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த யோசனையைக் கை விட வேண்டிய அவசியம் என்ன? நம்முடைய ராஜ்ய சட்டங்கள் பலவற்றிற்கு பல திருத்தங்கள் தேவைப்படுகின்றன. லா கமிஷன் அறிக்கையில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித்தனியாக ஒரு கமிஷன் ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு யோசனையை அறிவித்திருந்தும் அதைக் கைவிட வேண்டிய காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்ய சட்டங்கள் அவ்வப்போது திருத்தி அமைத்துக்கொண்டு வரப்படுகின்றன. 1958-ல் அவ்வாறு பரிசீலனை செய்யப்பட்டது. சிக்கனத்துக்காக கமிஷன் நியமிப்பது கை விடப்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இன்றைய சூழ்நிலையில் வாழ்க்கைக்கு சம்பந்தமாக பல அம்சங்களில் பணச்செலவைப் பார்க்கக் கூடாது என்றும், நியாயமான செலவை செய்ய வேண்டும் என்றும் சொல்லக்கூடிய நோக்கத்தில் சட்டக் கமிஷன் இந்த யோசனையைச் சொல்லியிருக்கிறார்களே, அது பரிசீலிக்கப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொன்ன யோசனை எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து தான் இந்தச் சட்டக் கமிஷன் அவசியம் இல்லை என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

பஸ்செல்லும் மார்க்கங்கள்

* 821 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962 பிப்ரவரி மாதத்திலிருந்து மாநிலத்தில் பல மாவட்டங்களிலும் பஸ் செல்லும் 'ரூட்'டுகளின் தூரமும் பஸ் 'டிரிப்'புகளும் அதிகரிக்கப்பட்டதுண்டா?

(இ) அப்படியானல், அதற்கு அவசர அவசியமென்ன?